# கர்த்தருடைய செட்டைகள் நமக்கு அடைக்கலம்

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. ரூத் 2:12

ரூத்தின் வாழ்க்கையிலே எல்லாம் இழந்திருந்தாலும், வெறுமையாக்கப்பட்ட ஒருநிலை அவளுக்கு இருந்தாலும், அவள் தன் மாமியை பின்பற்றி உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று இஸ்ரவேலின் தேவனிடத்தில் அடைக்கலமாய் ஓடி வந்தாள். இந்த தேவன் எனக்கு தேவனாய் வேண்டும் என்று வந்த அவளை தேவன் வெறுமையாய் விடவில்லை. என் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து என்னை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் தம்முடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார் யோவா 1:12-ல் சொல்லப்பட்ட வார்த்தையின்படி ரூத் தேவனுடைய பிள்ளை என்ற அதிகாரத்தைப் பெற்றாள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும் மத் 6:33 என்ற வார்த்தையின்படி தேவனிடம் அடைக்கலமாய் ஓடிவந்து, அவரை ஏற்றுக் கொண்ட அவளுக்கு நிறைவான பலன் கிடைத்தது. ஒன்றிலும் அவள் குறையவில்லை. அதே போல தேவன் உங்களையும் நிறைவான நன்மையினால், பலனினால் நிரப்பி ஆசீர்வதிப்பார். என் ஆண்டவராகிய தேவன் தாமே இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய நாமத்தினால் ஆசீர்வதித்து, பாதுகாத்து வழி நடத்துவாராக.

## சிறுவர் பகுதி

# நீ நினைக்காததும் நிறைவேறும்

### ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

தமிழ்நாட்டின் தென் மாவட்டத்திலுள்ள ஒரு ஆரம்ப பள்ளியின் தலைமை ஆசிரியர், ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். ரைட் சகோதரர்கள் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்து வானில் பறக்கச் செய்தது பற்றி சொல்லிக் கொண்டிருக்கும் போதே சில மாணவர்கள் குறும்புத்தனமாக சார் நாங்க எல்லாம் விமானத்தில் எப்போது பறப்பது என்றார்கள். தலைமை ஆசிரியருக்கு தடுமாற்றம் பதில் சொல்ல முடியவில்லை அமைதியாய் இருந்தார். ஆனால் ஒன்று செய்தார் தன் நண்பர்கள், ஊரில் உள்ளவர்களிடம் பணம் சேகரித்து ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் 20 பேரை மதுரையிலிருந்து சென்னை வரை விமானத்தில் கூட்டிச் சென்றார். அந்த அரசு பள்ளி மாணவர்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்காதது நிறைவேறினவுடன் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.



# சிறுவர் பகுதி

அந்த தலைமை ஆசிரியரின் ஆர்வத்தையும், நற்செயலையும் பார்த்து எல்லாரும் பாராட்டினார்கள். குட்டீஸ் நம்ம ஆண்டவரும் கூட உங்களுடைய மனதின் விருப்பங்களையும், வேண்டுதல்களையும், கஷ்டங்களையும் நீங்கள் வாயைத் திறந்து சொல்லும் முன்னே அறிந்தவர். ஒரு ஆசிரியருக்கே தன்னுடைய மாணவர்களுடைய விருப்பத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் நம்மைப் படைத்த, நமக்காக உயிரைக் கூட கொடுத்த இயேசப்பா உங்களுக்காக, உங்க அம்மா அப்பாவுக்காக எதையாகிலும், யாவையும் செய்திடுவார். எனவே உங்கள் பள்ளி கட்டணம், பாடப் புத்தகங்கள் மற்றும் தேவைகளுக்காக, உங்க அம்மா அப்பாவோடு சேர்ந்து அல்லது தனியாக இயேசப்பாவிடம் கேட்பீங்களா?

எருசலேம் தேவாலயத்தின் வாசலில் பிறந்ததிலிருந்து கால் நடக்க முடியாது இருந்த ஒரு அண்ணனை தினமும் சுமந்து கொண்டு வந்து உட்கார வைப்பாங்க. அவங்க அங்கே உட்கார்ந்து பிச்சை கேட்டு கொண்டு இருப்பாங்க. ஒரு நாள் இயேசப்பாவுடைய இரண்டு சீஷர்கள் பேதுருவும், யோவானும் வந்தப்ப அவங்களைப் பார்த்து பிச்சை கேட்டாங்க. உடனே அவங்க இரண்டு பேரும் எங்களை நோக்கி பார் என்றாங்க. அவங்க ஏதாவது காசு கொடுக்க போறாங்களா என்று நினைத்து, அந்த அண்ணனும் அவங்க கையை உற்றுப் பார்த்தாங்க. உடனே பேதுரு வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே எழுந்து நட என்று அவங்க கையைப் பிடித்து தூக்கி விட்டாங்க. அந்த அண்ணன் கால்கள் பெலனடைந்து குதித்து எழுந்தாங்க. நடந்து குதித்து தேவனை துதித்துக் கொண்டு அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் போனாங்க. அந்த அண்ணன் எழுந்து நடப்போம் என்று ஒரு நாள் கூட நெனச்சே பார்த்திருக்க மாட்டாங்க. ஆனால் இயேசப்பாவின் நாமத்தினாலே எழுந்து நடந்தது அந்த அண்ணனுக்கு ஆச்சரியமாய் இருந்தது, சுற்றிலும் இருந்தவர்களுக்கும் ஆச்சரியமாய் இருந்தது. உங்களுக்கும் ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது. ஜெபிப்போமா?

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நாங்க நினைக்கிறதற்கும், வேண்டிக் கொள்ளுவதற்கும் அதிகமாக எங்களுக்கு உதவி செய்பவரே எங்க படிப்பில உதவி செய்யுங்கப்பா. அம்மா அப்பாவுடைய பணக்கஷ்டங்களை, மனகஷ்டங்களை சரி செய்து சந்தோஷமாய், சமாதானமாய் வாழ உதவி செய்யுங்கப்பா. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும்,
அதை நான் செய்வேன். யோவான் 14:14

